

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 2 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

### தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்க வேண்டும்!

## நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!




புதுடெல்லி, மார்ச் 20 -

தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொகுதி மறுவரையறை குறித்து நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் தொடர்ந்து நோட்டீஸ் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதற்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கரும் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதற்கு தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் கடும்எதிர்ப்புதெரிவித்துள்ளன. இந்நிலையில், தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா மற்றும் தயாநிதிமாறன் உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, நீதி வேண்டும் என்று முழக்கங்களை எழுப்பினர்.

பஞ்சாப், கேரள மாநிலங்களின் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நேற்று (19.3.2025), தலைமைச் செயலகத்தில், 2024–2025 ஆம் ஆண்டின், நெடுஞ்சாலைத்துறை திட்டப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும், 2025–2026 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில் இடம்பெறவேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கரபாண்டியன், முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2025) முகாம் அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன், ஆகியோர் சந்தித்து, 2025–26ஆம் நிதியாண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதையொட்டி வாழ்த்துப் பெற்றனர்.

### சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில்

## எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை!

### பேரவையில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

**சென்னை, மார்ச் 19-**

**சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை என பேரவையில் வினா-விடை நேரத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.**



அதன் விபரம் வருமாறு:

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் அரிசியிலிருந்து எத்தனால் தயாரிக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த மோகனூர் வட்டத்தில் அமைந்துள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006-2011 ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது, துணை முதலமைச்சராக இருந்த, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழில்துறை அமைச்சராக பொறுப்பேற்று, அந்தநேரத்தில் எத்தனால் ஆலை அமைப்பதற்கு ஆணை பிறப்பித்து, அது நிறுவப்பட்டது. இந்த எத்தனால் ஆலையிலே கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் மக்காச்சோளம், அரிசி மற்றும் மரவள்ளி கிழங்குமூலம் எத்தனால் தயாரிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு எத்தனால் தயாரிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு தனியாக இயந்திரங்கள் அமைக்க வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, எத்தனால் உற்பத்தி ஆலையினை மேம்படுத்துவதற்காக சுமார் ரூபாய் 6 கோடியே 67 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியினை மேற்கொள்வதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அதனடிப்படையிலே அந்த ஆலையை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, மரவள்ளிக் கிழங்கு, அரிசி இவற்றிலிருந்து எத்தனால் தயாரிப்பதற்கு தனியாக இயந்திரத்தை அமைக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அதற்கான வாய்ப்பில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்க இந்த ஆலையிலே வாய்ப்பிருக்கிறது.

சர்க்கரை கழிவுப் பாகிலிருந்து, *Molasses*-லிருந்து *Rectified spirit* என்கிற எரிசாராயம் தயாரிக்கப்படுகிறது. இந்த எரிசாராயத்திலிருந்து எத்தனால் அல்லது *Enriched Neutral Alcohol* தயாரிக்கப்படுகிறது. இதிலே முழுக்க கரும்பிலிருந்து நேரடியாக எத்தனால் தயாரிக்க வேண்டுமென்றால், கரும்பு உற்பத்தியிலிருந்து சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை ஏற்படும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் உற்பத்தியாகிற சர்க்கரையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கி, அவற்றையெல்லாம் நியாயவிலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்குகின்ற நிலை இருக்கிறது. கரும்பு உற்பத்தி பரப்பு அதிகமாகிற போது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, எதிர்காலத்தில் பரிசீலிக்க வாய்ப்பிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.